# தேனி மாவட்டம்

## விளம்பர தட்டிகள் / பிளக்ஸ் பேனர்கள் அமைத்தல் தொடர்பான விதிமுறைகள்:

டிஜிட்டல் பேனர்கள் / விளம்பர பலகைகள் அமைத்தல் தொடர்பாக அரசாணை எண்:175, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 16.11.2011-இல் பின்வரும் விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

1. விண்ணப்பம்

   a. 15 நாட்களுக்கு முன்னதாக படிவம் 1-இல் விண்ணப்பம் செய்ய வேண்டும்.
   b. ஒவ்வொரு காவல் நிலைய எல்லைக்கும் தனித்தனியாக விண்ணப்பம் செய்ய வேண்டும்.

2. படிவம் 1-இல் பின்வரும் சான்றுகளை இணைத்து விண்ணப்பம் செய்ய வேண்டும்.

i டிஜிட்டல் பேனர்கள் / விளம்பர பலகைகள் வைக்கப்படவுள்ள இட உரிமையாளரின் தடையில்லா சான்று.

ii டிஜிட்டல் பேனர்கள் / விளம்பர பலகைகள் வைக்கப்படவுள்ள இடமானது மாநில அல்லது மத்திய அரசுக்கு சொந்தமானது எனில் உதவி செயற்பொறியாளர் அல்லது உதவி கோட்டப்பொறியாளர் நிலைக்கு குறையாத அலுவலர்களின் தடையில்லாச் சான்று.

iii நகராட்சி இடங்களில் ஆணையாளரின் தடையின்மைச் சான்று.

டிஜிட்டல் பேனர்கள் / விளம்பர பலகைகள் வைக்கப்படவுள்ள இடமானது வெவ்வேறு உரிமையாளர்களின் வசம் உள்ள இடம் எனில் (அரசு / தனியார்) ஒவ்வொரு உரிமையாளரிடமிருந்தும் தனித்தனியாக தடையின்மைச் சான்று பெறப்பட வேண்டும்.

**3.** இலகுவான மற்றும் பாதுகாப்பான வாகனப் போக்குவரத்துக்கோ, மக்கள் போக்குவரத்துக்கோ இடையூறாக இல்லை என தொடர்புடைய காவல் ஆய்வாளரிடம் பெறப்பட்ட தடையின்மைச் சான்று.

**4.** தெருக்களில் டிஜிட்டல் பேனர்கள் / விளம்பர பலகைகள் வைக்கப்படவுள்ள இடங்களை குறிப்பிட்டு காட்டும் கூட்டு வரைபடம்.

5. **கட்டண விவரம்:-**

தொடர்புடைய கருவூலத்தில் பின்வரும் தொகை செலுத்தப்பட்டதற்கான சலான் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| மாநகராட்சி | ரூ.200 |
| நகராட்சி | ரூ.100 |
| பேரூராட்சி | ரூ.50 |

**6.** மேற்கண்டவை பெறப்பட்டவுடன் படிவம் 2-இல் 6 நாட்களுக்கு மிகாமல் அனுமதி வழங்கப்படும். (வைக்கும் நாள், அகற்றும் நாள் உட்பட)

**7.** தாமதமாகவோ, சரியான முறையிலோ விண்ணப்பம் செய்யப்படவில்லை எனில் படிவம் 3-இல் அனுமதி மறுக்கப்படும்.

8. டிஜிட்டல் பேனர்கள் / விளம்பர பேனர்கள் அச்சிடும்போது அதில் தொடர்புடைய அலுவலக அனுமதி எண், அனுமதி காலம், மொத்த விளம்பர பேனர்களின் எண்ணிக்கை போன்றவற்றை ஒரு அங்குலத்திற்கு குறையாத அளவில் அனுமதி பெறுபவர் குறிப்பிடவேண்டும்.

9. மேற்கண்ட அனுமதி கட்டணத்துடன் கூடுதலாக வைப்புத்தொகையாக ரூ.50/-(ஒரு விளம்பரத்திற்கு) செலுத்த வேண்டும். விளம்பரம் வைக்கும் போது தெரு அல்லது வேறு பொது சொத்திற்கு சேதம் விளைவிக்கப்பட்டால், இத்தொகை திருப்பி வழங்கப்படமாட்டாது. மேலும் சேதமானது இத்தொகையினைவிட அதிகமாக உள்ள பட்சத்தில் கூடுதல் செலவினம் விளம்பர அனுமதி பெற்றவரிடம் வசூலிக்கப்படும். சேதம் எதுவும் இல்லாத பட்சத்தில் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பினால் இத்தொகை திரும்ப வழங்கப்படும்.

10. டிஜிட்டல் பேனர்கள் / விளம்பர பேனர்கள் அளவு:-

i.

| தெருவின் அகலம் (அடியில்) | விளம்பர பலகையின் அகலம் |
|---|---|
| 100-க்கு மேல் | 15 அடி (உயரம்) X 24 அடி (அகலம்) |
| 60 ___ 100 | 12 அடி (உயரம்) X 20 அடி (அகலம்) |
| 40 ___ 60 | 10 அடி (உயரம்) X 16 அடி (அகலம்) |
| 20 ___ 40 | 8 அடி (உயரம்) X 5 அடி (அகலம்) |
| 10 ___ 20 | 3 அடி (உயரம்) X 2.5 அடி (அகலம்) |
| centre Medium | 4 அடி (உயரம்) X 2.5 அடி (அகலம்) |

ii. சாலை ஓரங்களில் மற்றும் நடைபாதையில் விளம்பரங்கள் வைக்க வாய்ப்புள்ள பட்சத்தில் சென்டர் மீடியனில் விளம்பரம் வைக்க அனுமதிக்கக் கூடாது. சென்டர் மீடியனில் வைக்கும் போது சாலை ஓரங்களில் வைக்கக் கூடாது.

iii. ஒரு தெருவில் வைக்கப்படும் அனைத்து டிஜிட்டல் பேனர்கள் / விளம்பரங்கள் முடிந்த வரை ஒரே அளவில் வைக்கப்பட வேண்டும்.

iv. 10 அடி நடைபாதைக்கு குறைவாக உள்ள சாலையின் இருபுறங்களிலும் டிஜிட்டல் பேனர்கள் / விளம்பரங்கள் வைக்க அனுமதிக்கக் கூடாது. தனியாக நடை பாதை இல்லாத நிலையில் சாலை ஓரத்திற்கும், டிஜிட்டல் பேனர்களுக்கும் இடையில் 10 அடி இடைவெளி இருக்க வேண்டும்.

v. சாலை ஓரங்களில் நடைபாதைக்கு இணையாகவே டிஜிட்டல் பேனர்கள் / விளம்பர பேனர்கள் வைக்கப்பட வேண்டுமே தவிர நடைபாதைக்கு குறுக்காக வைக்கக் கூடாது.

vi. இரண்டு டிஜிட்டல் பேனர்கள் / விளம்பர பலகைகளுக்கு இடையில் 10 மீட்டர் இடைவெளிக்கு குறையாமல் இருக்க வேண்டும். ஒரு சாலையில் இந்த இடைவெயியானது ஒரே அளவில் இருக்க வேண்டும்.

vii. 10 அடிக்கு குறைவான சாலைகளில் (Carriage Way and Foot Path) விளம்பரங்கள் செய்ய அனுமதிக்கக் கூடாது. 10 முதல் 40 அடி வரை அகலம் உள்ள சாலைகளின் ஒரு புறம் மட்டுமே விளம்பரங்கள் செய்ய அனுமதிக்க வேண்டும். 40 அடிக்கு கூடுதலாக இருந்தால் மட்டுமே இரு புறங்களிலும் விளம்பரங்கள் செய்யலாம்.

viii. வாகனப்பாதை(Carriage Way), நடைபாதையில்(Foot path) விளம்பரங்கள் வைக்கக் கூடாது. மண் பரப்பில் மட்டுமே வைக்க வேண்டும்.

11. **அனுமதி வழங்கக் கூடாத இனங்கள்:-**

i. கல்வி நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள், நோயாளிகள் தங்கியுள்ள மருத்துவமனைகள்.

ii. தெருமுனைகள், சாலை சந்திப்புகள், சாலை சந்திப்பிலிருந்து இருபுறமும் 100 மீட்டர் தூரம் வரை.

iii. அறிவிக்கப்பட்ட நினைவு சின்னங்கள், சிலைகள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் முன்பாக.

12. **அனுமதியின்றி வைக்கப்படும் மற்றும் ஆட்சேபகரமான விளம்பரங்கள்:-**

i. அனுமதியின்றி வைக்கப்படும் விளம்பரங்கள் உரிய அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டு, அகற்றுவதற்கான செலவு தொகை விளம்பரம் வைத்தவரிடம் வசூல் செய்யப்படும்.

ii. வைக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் வாசகங்கள் ஆட்சேபகரமாக இருந்தால் உடனடியாக தானாகவோ, அல்லது முறையீட்டின் பேரிலோ விளம்பரங்கள் அகற்றப்படும்.

13. **ஆய்வு:-**

வைக்கப்பட்டுள்ள விளம்பரங்கள் சரியான விதிமுறைகளின்படி அமைக்கப்பட்டுள்ளதா என ஆய்வு செய்யப்படும்.

14. **இரத்து:-**

அனுமதி பெற்றவர் விதிகளை மீறினாலோ அல்லது விதிகளின்படி நடக்கவில்லை என்றாலோ தானாகவோ முறையீட்டின் பேரிலோ அனுமதியினை உடனடியாக ரத்து செய்து விளம்பரங்களை அகற்ற ஆணை பிறப்பிக்கப்படும். இவ்வினங்களில் வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும்.

15. **அகற்றுதல்:-**

அனுமதி காலம் முடிந்த பின்னர் அனுமதி பெற்றவர் விளம்பரங்களை அகற்றி சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வண்ணம் அழிக்க வேண்டும்.

16. **விலக்கு:-**

i. வியாபாரம் நடத்துமிடம் அல்லது கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ள விளம்பரங்களானது இவ்வரசாணையின் வரையரைக்குள் வராது.

ii. ஒரு இடம் அல்லது கட்டிடத்தில் வைக்கப்படும் இடம் / கட்டிட பெயர் பலகைகள் அல்லது உரிமையாளரின் பெயர் பலகைகளை - டிஜிட்டல் பேனர்கள், விளம்பரங்களாக வைப்பது இவ்வரசாணையின் வரையரைக்குள் வராது. இருப்பினும் இந்த பெயர் பலகையானது அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

17. **மேல்முறையீடு:-**

மாவட்ட ஆட்சித்தலைவரால் ஒரு விண்ணப்பமானது நிராகரிக்கப்பட்டாலோ அல்லது வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்பட்டாலோ, இதனை எதிர்த்து தமிழக அரசிடம் 30 நாட்களுக்குள் படிவம் 4-இல் ரூ.500/-க்கான சலானுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

18. **பதிவேடு:-**

- படிவம் 5-இல் பதிவேட்டினை பராமரிக்க வேண்டும்.
- தேனி மாவட்டத்தில் டிஜிட்டல் பேனர்கள் / விளம்பர பலகைகள் வைக்க மாவட்ட ஆட்சியரிடம் உரியவாறு அனுமதி பெற வேண்டும்.
- சென்னை உயர்நீதிமன்ற ஆணைகளின்படி பொது இடங்களில் டிஜிட்டல் பேனர்கள் / விளம்பர பலகைகள் போன்றவற்றை முறையான அனுமதியின்றி வைக்க தடைவிதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.
- இவ்வினம் உயர்நீதிமன்ற கண்காணிப்பில் உள்ள இனம் என்பதால் அச்சக உரிமையாளர்கள் டிஜிட்டல் பேனர்கள் / விளம்பர பேனர்கள் அச்சிடும்போது அதில் மாவட்ட ஆட்சியரின் அனுமதி ந.க.எண். நாள் மற்றும் அனுமதி காலம் போன்றவற்றை குறிப்பிடவேண்டும்.
- மாவட்ட ஆட்சியரின் முறையான அனுமதியின்றி பொது இடங்களில் பிளக்ஸ் பேனர்கள் அச்சிடக்கோரி வரும் நபர்களது கோரிக்கைகளை அச்சக உரிமையாளர்கள் ஏற்கக்கூடாது. முறையான அனுமதி ஆணைகளை சரிபார்த்த பின்னரே பிளக்ஸ் பேனர்கள் / விளம்பர தட்டிகளை அச்சிட வேண்டும்.